**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.744/2023

வா.சா.1 ரவிசந்திரன், த/பெ.வரதராஜுலு

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:–</u>

1. இந்த வழக்கு சொத்தை பொறுத்து தாக்கல் செய்யும் 2வது வழக்கு என்றால் சரிதான். பிரதிவாதி என் மகள். என் மகளின் முதல் கணவர் சாமிநாதன் இறந்ததால் கிடைத்த இழப்பீட்டு தொகையை வைத்து தாவா சொத்து வாங்கப்பட்டது என்று ஈரோடு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.205/2018 என்று தாக்கல் செய்தேன்.

2. இந்த வழக்கு சொத்து மேற்கண்ட அ.வ.எண்.205/2018ல் 3வது வழக்கு சொத்தாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.205/2018க்குரிய வழக்குரை என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் பிரதிவாதி விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாது என்று பரிகாரம் கோரினேன் என்றால் சரிதான். இந்த தாவா சொத்தில் வரும் வருமானத்தை பாதியை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யக் கேட்டேன் என்றால் சரிதான்.

3. அந்த வழக்கில் சாட்சியை விசாரித்து வழங்கப்பட்ட தீர்ப்பில் இளவர் வாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், சொத்து பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும் தீர்ப்பானது என்றால் தக்க ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கின் தீர்ப்பு நகல் என்னிடம் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. வா.சா.ஆ.1 ஆவணமான கிரயப்பத்திரத்தை மேற்கண்ட அசல் வழக்கான 205/2018ல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1ல் பிரதிவாதி இந்த தாவா சொத்தை கணவரின் இழப்பிற்காக கொடுக்கப்பட்ட தொகையை வைத்து வாங்கியதாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான்.

5. மேற்படி தீர்ப்பில் பத்தி 14ல் இந்த தாவா சொத்து இறந்து போன சாமிநாதனின் இறப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற இழப்பீட்டு தொகையை கொண்டு கிரயம் பெறப்படவில்லை என்றும், பிரதிவாதியின் பெயரிலுள்ள தனிப்பட்ட கிரயச் சொத்து என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. மேற்கண்ட வழக்கிற்கு எதிராக நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கு சொத்தை பொறுத்து தள்ளுபடியானது என்று சொன்னால் தக்க ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தள்ளுபடியானது. ஏற்கனவே இந்த வழக்கில் உள்ள தாவா சொத்தை பொறுத்து முடிவு செய்ததை மீண்டு வழக்காட முடியாது என்று சொன்னால் சரியல்ல.

7. இந்த தாவா சொத்தில் இளவர் சர்வேஸ்பிரவித்க்கு பங்கு இருப்பதாகவும், அதை பிரித்து கொடுக்கவேண்டும் என்று கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தவிர வேறு 2 வழக்குகள் என் மகள் பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**